செ.வெ.எண்-01 நாள்-01.08.2021

# அரியலூர் மாவட்டம்
# கொரோனா பெருந்தொற்றை தடுக்கும் வகையில் தொடர் விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட பேருந்து நிலைத்தில் சுகாதாரத்துறையின் சார்பில் கொரோனா பெருந்தொற்றை தடுக்கும் வகையில் தொடர் விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (01.08.2021) துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா பெருந்தொற்றை குறைக்கும் வகையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறார்கள். அதன் அடிப்படையில் தமிழகத்தில் கொரோனா பெருந்தொற்று படிப்படியாக குறைந்து, தற்பொழுது கட்டுக்குள் உள்ளது. மேலும், மருநத்துவ வல்லுநர்களால் தெரிவிக்கப்படும் கொரோனா பெருந்தொற்றின் மூன்றாம் அலையிலிருந்து பொதுமக்களை பாதுகாத்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று விழிப்புணர்வு தொடர் பிரச்சாரம் துவக்கி வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், அரியலூர் மாவட்டத்திலும் கொரோனா பெருந்தொற்று குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுகாதாரத்துறையின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, மாவட்டம் முழுவதும் நடத்த உள்ளன.

அதன்படி, செய்தித்துறையின் சார்பில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் சார்பில் கொரோனா விழிப்புணர்வு குறும்படங்கள் அதிநவீன மின்னணு விளம்பரத் திரை வாகனம் மூலம் திரையிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பொதுமக்கள் அதிகம் வருகை தரும் இடங்களான பேருந்து நிலையங்கள், வணிக நிறுவனங்கள் உள்ளிட்டவைகளில் விழிப்புணர்வு ஒட்டுவில்லைகள் ஒட்டியும் விழிப்புணர்வுகள் ஏற்பட உள்ளன என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், அரியலூர் பேருந்துநிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பேருந்துகளில் பயணம் செய்ய காத்திருந்தவர்களிடம், பேருந்தில் பயணம் செய்யும்போது அரசு தெரிவித்துள்ள நிலையான வழிக்காட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றவும், முககவசம் அணியவும், கைகளை சோப்பு போட்டு கழுவவும், பொது இடங்களில் சமூக இடைவெளியினை பின்பற்றவும் அறிவுறுத்தினார்கள். மேலும், பேருந்துநிலைய வணிக நிறுவனங்களில் கொரோனா விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை ஒட்டி, மாற்றுத்திறனாளிகளுக்கு முககவசங்களையும் வழங்கினார்கள். மேலும், அங்கு அமைக்கப்பட்டிருந்த விழிப்புணர்வு கையெழுத்து பலகையில் கொரோனா பெருந்தொற்று விழிப்புணர்வு கருத்தை பதிவு செய்து, கையெழுத்திட்டார்கள். கொரோனா தடுப்பூசி மையத்தை பார்வையிட்டு, கொரோனா தடுப்பூசியின் அவசியம் குறித்தும் பொதுமக்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**